செய்தி வெளியீடு எண்:486 நாள்:19.10.2016

செய்தி வெளியீடு

**மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் எழுதுபொருள், அச்சுத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் இன்று (19.10.2016) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

**********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் விரைவாக பொதுமக்களுக்குச் சென்றடையும் வகையில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறையின் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் எழுதுபொருள், அச்சுத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தெரிவித்தார்.

சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்தும் செய்தி–மக்கள் தொடர்புத் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறையின் செயல்பாடுகள் குறித்தும் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் இன்று (19.10.2016) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் எழுதுபொருள், அச்சுத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் எழுதுபொருள், அச்சுத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை தேர்தல் அறிக்கையில் வெளியிட்டு, அதனை நிறைவேற்றி வருகிறார்கள். அந்த வகையில், செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசுப் பொருட்காட்சிகளுக்கு வருகை தரும் பொது மக்கள் அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விவரங்களை அறிந்து பயன்பெறும் வகையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் எல்.இ.டி.மின் விளக்கு பலகைகள் அமைத்தல், சென்னை மாநில செய்தி நிலைய நூலகத்தினை நவீனமயமாக்குதல், வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப செய்தி–மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல், மணிமண்டபங்கள், நினைவகங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம் நவீன முறையில் 360 டிகிரி பரிணாமத்தில் படம் எடுத்து அரசு

இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல், மாவட்ட தலைநகரங்களில் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்துதல் போன்ற அறிவிப்புகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இக்கூட்டத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, வரவு–செலவு பிரிவு, நினைவகங்கள் பிரிவு, தமிழரசு அலுவலகம், செய்தி நிலையம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், திரைப்படத் துறையினர் நலவாரியம், கலைவாணர் அரங்கம், வள்ளுவர் கோட்டம், இராஜாஜி மண்டபம், நிர்வாகப் பிரிவுகள் ஆகிய அனைத்து பிரிவுகளின் பணிகளையும் ஆய்வு செய்து, திருவாரூர் மாவட்டத்தில் ரூ.1.10 கோடியில் கட்டப்பட்டு வரும் மனுநீதிச் சோழன் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.1.30 கோடியில் கட்டப்பட்டுவரும் ஹைதர்அலி மற்றும் திப்புசுல்தான் மணிமண்டபம், கடலூர் மாவட்டத்தில் 1.15 கோடியில் கட்டப்பட்டுவரும் சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், எழுதுபொருள் அச்சுத்துறை மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் வெப் செட் இயந்திரம் கொள்முதல், அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படும் புத்தகங்கள் வடிவமைக்க நவீன சிறப்புப் புத்தகம் கட்டும் இயந்திரம், திருச்சி கிளையில் உள்ள அச்சு இயந்திரத்தில் நவீன தொழில்நுட்பம் கொண்ட டிஜிட்டல் எண்ணிடும் இயந்திரம், அரசு மைய அச்சகத்தில் உள் இணைப்பு வசதி கொண்ட தொலைபேசி (Intercom), பன்முக அச்சுப் பொறி, கம்பியடிக்கும் இயந்திரங்கள், அரசு அச்சகங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களை தவிர்த்திட மின்வசதிகளை புதுப்பித்து மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பாகவும் ஆய்வு செய்தார்.

அரசு செய்கின்ற பல்வேறு திட்டங்களை திரைப்படப் பிரிவின் மூலமாக செய்தி படங்களாக தயாரித்து வெளியிட வேண்டும். நவீன முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் அமைய வேண்டும். அரசினுடைய திட்டங்கள், நிகழ்ச்சிகள் இவற்றை எல்லாம் மக்களுக்கு உடனுக்குடன் கொண்டு சேர்க்க வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடனும், கடமை உணர்வுடனும் பணிகளைத் திறன்பட ஆற்றிட வேண்டும். செய்திகளை, குறித்த நேரத்தில் விரைவாக பத்திரிக்கைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் கொண்டு சேர்த்திட வேண்டும்.

செய்தித் துறை அலுவலர்கள் செய்தியாளர்களுடன் நல்லுறவை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வரவேண்டும். செய்தியாளர்களின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டுவரும் பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்,

குடும்ப உதவி நிதி ஆகியவற்றை செய்தியாளர்கள் பயன்பெறும் வகையில் காலதாமதமின்றி விரைவாக கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரையரங்குகளில் அரசுச் செய்திப் படங்கள் முறையாக காண்பிக்கப்படுகிறதா என்பதை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நினைவகங்களையும் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும். மேலும், அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும்.

அரசின் திட்டச் சாதனைகளை மக்கள் அறியும் வண்ணம் தயாரிக்கப்படும் செய்திப் படங்களை கிராமப்புறங்களில் LED திரை வாகனங்கள் மூலமாக காண்பித்து வர வேண்டும். அரசுப் பொருட்காட்சிகளில் அரசின் திட்டங்கள், சாதனைகளை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் அரசுத் துறை அரங்குகள் சிறந்த முறையில் அமைக்கப்பட வேண்டும். மக்கள் தொடர்பு அலுவலர்கள் விளம்பரப் பணிகளை தொய்வின்றி ஆற்றி வர வேண்டும்.

தமிழரசு இதழ்களை பொதுமக்கள் விரும்பி வாங்கிப் படித்துப் பயன்பெறும் வகையில் தயார் செய்து சிறந்த முறையில் வெளியிட வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பிற துறைகளில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் அத்துறையின் செயல்பாடுகளையும், திட்டங்களையும், நற்பணிகளையும் மக்களுக்குச் சிறந்த முறையில் எடுத்துச் செல்ல வேண்டும். அரசினுடைய செயல்பாடுகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறந்த முறையில் செயல்பட்டு, திட்டங்கள் மக்களை சென்றடைய உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் பேசினார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் திரு. ஆர்.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குநர்கள், திரு. எஸ்.பி. எழிலழகன், திருமதி. டி.ஆர்.ஜெயஸ்ரீ, இணை இயக்குநர்கள், திரு.உல.இரவீந்திரன், திரு. சிவ.சு. சரவணன், திரு. லோ.கிருஷ்ணமூர்த்தி, எழுதுபொருள் அச்சுத்துறை இணை இயக்குநர் திருமதி.கே.பேச்சியம்மாள் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை அலகு அலுவலகங்களின் அலுவலர்கள், பிரிவு அலுவலர்கள் உட்பட துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**